வெற்றிட மொன்று இருப்பதன் காரணமாக மாத்திரம் செயல்கள் செல்லுபடியற்ற தாக்கப்படுதல் ஆகாது.

10. பேரவையின் உறுப்பினர்கள் மத்தியில் வெற்றிடமொன்று இருக்கின்றமை காரணமாக மாத்திரம் அல்லது அதன் உறுப்பினரொருவரது நியமனத்திலான ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம் பேரவையின் செயல் அல்லது முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்ற தாக்கப்படுதலாகாது.

பேரவையின் இலச்சினை.

11. (1) பேரவையின் இலச்சினையானது பேரவையின் கட்டுக்காப்பில் இருந்துவருதல் வேண்டும்.

(2) பேரவையின் இலச்சினையானது பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றஞ்செய்யப்படலாம்.

(3) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் இரு உறுப்பினர்களின் சமூகத்தில் தவிர, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவ்விரு உறுப்பினர்களும் தமது சமூகத்திற்கு அடையாளமாக அச்சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

### குறிக்கோள்களும், தத்துவங்களும், பணிகளும்

குறிக்கோள்கள்.

12. பேரவையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) எச்சந்தையொன்றில் பிணையங்கள் வழங்கப்பட்டு, ஒழுங்காக நியாயமானமுறையில் அவற்றில் வியாபாரஞ்செய்யப்பட முடியுமோ, அச்சந்தையொன்றை உருவாக்குதலும் பேணுதலும் ;

(ஆ) முதலீட்டாளர்களின் நிதிசார் அக்கறையைப் பாதுகாத்தல் ;

(இ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றமையால் எழும் நிதிசார் இழப்பிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதன்பொருட்டு நட்டஈட்டு நிதியமொன்றைச் செயற்படுத்துதல்; அத்துடன

(ஈ) பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துதலும், அத்துடன் அத்தகைய சந்தையில் உயர்தொழிற் தராதரங்கள் பேணப்படுதலை உறுதிப்படுத்துதலும்.

பேரவையின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

13. பேரவையானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) கட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றிற்கு, பங்குத்தொகுதி பரிவர்த்தனையாக செயற்படுவதற்கு உரிமம் வழங்குதலும், அவற்றின் தொழிலின் நற்தன்மையினை உறுதிப்படுத்துதலும் ;

(க) இச்சட்டத்தின்கீழ் பேரவையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு இடைநேர் விளைவாகக்கூடியவாறான அல்லது உகந்தனவாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்கள் யாவற்றையும் புரிதல்.

பேரவை பார்வையிடுவதற்கான தத்துவங்கள் முதலியன.

14. பேரவையானது 13 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமான பின்வரும் தத்துவங்களையும் உடையதாதல் வேண்டும். அவ்வாறு—

(அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகளும் பங்குத் தொகுதித் தரகர்களும் பங்குத்தொகுதி வியாபாரிகளும், இச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயையச் செயற்படுகின்றனரா அல்லது செயற்படுகின்றனரா எனத் தீர்மானிப்பதற்கென அவற்றின் அல்லது அவர்களின் செயற்பாடுகளைக் கிரமமாகப் பார்வையிடுதல் ;

(ஆ) பேரவையினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும், தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆண்டு ஐந்தொகையும் வருமானக் கூற்றுக்களையும் பேரவையில் கோப்பிடும்படி உரிமைபெற்ற பங்குத் தொகுதித் தரகர்களையும் பங்குத்தொகுதி வியாபாரிகளையும் தேவைப்படுத்துதல்.

## பாகம் III

## பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகளுக்கு, பங்குத்தொகுதித் தரகர்களுக்கு அத்துடன் பங்குத்தொகுதி வியாபாரிகளுக்கு உரிமங்கள் வழங்குதல்

பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையாக அல்லது பங்குத் தொகுதித் தரகராக அல்லது பங்குத் தொகுதி வியாபாரியாக உரிமம் வழங்கல்.

15. முப்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும்—

(அ) பங்குத்தொகுதி பரிவர்த்தனைத் தொழில் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த முன்னுகின்ற ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு ; அல்லது

(ஆ) பங்குத்தொகுதித் தரகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியாகத் தொழில் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த முன்னுகின்ற எவரேனும் ஆள்,

விடயத்துக்கேற்றவாறுபோல் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக அல்லது பங்குத்தொகுதித் தரகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியாக உரிமமளிக்கப்பெறுவதற்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றாக உரிமம் ஒன்று வழங்கப்படுவதற்கு என இணங்கியொழுகப்படவேண்டிய நியதி, நிபந்தனைகள்.

**16.** இதற்கான அட்டவணையின் I ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாத கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவுக்கு, பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றாக இச்சட்டத்தின்கீழ் உரிமம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

பங்குத்தொகுதி வியாபாரிக்கு அல்லது பங்குத் தொகுதித் தாகருக்கு உரிமம் ஒன்று வழங்கப் பெறுவதற்கு இணங்கியொழுகப்பட வேண்டிய நியதி நிபந்தனைகள்.

**17.** இதற்கான அட்டவணையின் II ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள நியதி, நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாத கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவுக்கு விடயத்திற்கேற்ப பங்குத்தொகுதி வியாபாரியொருவராக அல்லது பங்குத்தொகுதி தாகர் ஒருவராக இச்சட்டத்தின்கீழ் உரிமம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

பங்குத்தொகுதித் தாகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியொருவராக உரிமம் ஒன்று வழங்கப் பெறுவதற்காகத் தனியாள் ஒருவரால் இணங்கியொழுகப்பட வேண்டிய நியதி நிபந்தனைகள்.

**18.** இதற்கான அட்டவணையின் III ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள நியதி, நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாத எவரேனும் தனியாளுக்கு இச்சட்டத்தின் கீழான உரிமம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

சான்றிதழ் வழங்குதல்.

**19.** (1) பதினைந்தாம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், பேரவையானது அதன்கண் கூறப்பட்ட விபரங்களைக் கருத்திற்கெடுத்துக்கொண்டு, அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, நேரிலோ பிரதிநிதி மூலமோ விசாரிக்கப்படுவதற்கு விண்ணப்பகாரருக்கு சந்தர்ப்பமொன்றைக் கொடுத்தபின்னர், விண்ணப்பகாரருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் அவருக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதா அல்லதா என்பதை அறிவித்தல் வேண்டும்.

(2) பேரவையானது—

(அ) பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றாகத் தொழில் கொண்டு நடாத்துவதற்குக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு உரிமமொன்றை வழங்குமிடத்து, ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றிற்குப் பயனுறும் விதத்தில் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் ; அல்லது

(ஆ) பங்குத்தொகுதித் தாகரொருவராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஒருவராகத் தொழில் கொண்டு நடாத்துவதற்கு எவரேனும் ஆளுக்கு உரிமமொன்றை வழங்குமிடத்து ஒரு வருட காலப்பகுதிக்குப் பயனுறும் விதத்தில் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

உரிமத்தினைப் புதுப்பித்தல்.

20. (1) உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றானது, அதன் உரிமத்தின் முடிவுறுந் தேதிக்கு முன்னதான ஆறு மாதங்களுக்குள், அதன் உரிமத்தினைப் புதுப்பித்தலுக்காகப் பேரவைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) விடயத்திற்கேற்ப உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித் தாகரொருவர் அல்லது பங்குத் தொகுதி வியாபாரியொருவர், உரிமம் முடிவுறுவதற்கு முன்னதாக மூன்று மாதங்களுக்குள், அவரது உரிமத்தினைப் புதுப்பிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்துப் பேரவைக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

(3) பேரவையானது, உரிமம் புதுப்பித்தலை வழங்குதலில், விடயத்திற்கேற்றுப்போன்று பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தாகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளை அல்லது ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக எந்நேரத்திலும் குற்றவாளியாக்கப்பட்டிருக்கவில்லை எனத் தம்மளவில் திருப்திப்படுத்திக்கொண்டிருத்தல் வேண்டும்.

பங்குத்தொகுதி வியாபாரி ஒருவருக்கு அல்லது பங்குத்தொகுதித் தாகரொருவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல்.

21. (1) பேரவையானது—

(அ) பங்குத்தொகுதித் தாகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளை அல்லது ஒழுங்குவிதிகளை மீறிச் செயலாற்றியுள்ளார் என ; அல்லது

(ஆ) பங்குத்தொகுதித் தாகர் அல்லது பங்குத் தொகுதி வியாபாரி போதிய பணவளம் படைத்தவராக இல்லாதொழிந்துள்ளார் என, அல்லது

(இ) பங்குத் தொகுதித் தாகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி அத்தகைய உரிமம் வழங்கப்பெறுவதற்குத் தகைமையற்றவராக்கப்பட்டுள்ளார் என ; அல்லது

(ஈ) பங்குத்தொகுதித் தாகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி, அவரது அலுவல்களை முகாமை செய்வதில் பிறழ் பிரயோகத்திற்கு அல்லது ஒழுங்கீனத்திற்கு குற்றவாளியாகியுள்ளார் எனத்

திருப்திப்படுகின்றவிடத்து, பங்குத்தொகுதித் தாகரொருவருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இல்லாதாக்குதல் வேண்டும்.

(2) முற்போந்த உட்பிரிவின் நியதிகளின்படி பங்குத்தொகுதி தாகரொருவருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரியொருவருக்கு வழங்கப்பட்ட உரிமம் ஒன்று இல்லாதாக்கப்படுமுன்னர், விடயத்திற்கேற்ப அத்தகைய பங்குத்தொகுதித் தாகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு அத்தகைய உரிமம் ஏன் இல்லாதாக்கப்படலாகாது என்பதற்கான காரணம் காட்டுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) பங்குத்தொகுதித் தாகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, உடனடியாக அவரது உரிமத்தைப் பேரவைக்கு ஒப்படைத்தல் அத்தகைய பங்குத்தொகுதி தாகரின் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியின் கடமையாதல் வேண்டும்.

**மறுப்பு, இல்லாதாக்கல் அல்லது இடைநிறுத்தல் ஆகியவற்றுக்கு எதிரான மேன்முறையீடு.**

22. (1) (அ) 19 ஆம் பிரிவின் கீழ் உரிமம் ஒன்றை வழங்க மறுக்கின்ற ;

(ஆ) 21 ஆம் பிரிவின்கீழ் உரிமம் ஒன்றை இல்லாதாக்குகின்ற அல்லது இடைநிறுத்துகின்ற,

பேரவையின் முடிவினால் இன்னலுறுகின்ற ஆள் எவரும் விடயத்துக்கேற்ப அத்தகைய மறுப்புக்கு, இல்லாதாக்கலுக்கு அல்லது இடைநிறுத்தலுக்கு எதிராக அத்தகைய முடிவு அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அவர் திருப்தியடையும் வண்ணம் பேரவையின் முடிபுக்கான காரணத்தைக் காட்டும்படி பேரவையைத் தேவைப்படுத்தலாம்.

(3) அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிபினால் இன்னலுறுகின்ற விண்ணப்பகாரர் ஒருவர், முடிபு விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள், அத்தகைய முடிபுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) இப்பிரிவின் கீழான மேன்முறையீடுகள் சம்பந்தமாக அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படுகின்றவரையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மீளாய்வு என்றவகையாகச் செய்யப்படும் விண்ணப்பம் சம்பந்தமாக அந்த உறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்டுள்ள விதிகள், இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீட்டுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, இப்பிரிவின் கீழான மேன்முறையீடு ஒன்று அதற்குச் செய்யப்பட்டதன்மேல், அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிபை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம் திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் என்பதுடன் நீதி நலன் கருதும் கட்டளை யொன்றை ஆக்கவும் செய்யலாம்.

*உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தாகரின் அல்லது உரிமம் பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியின் இறப்பு, பதவி துறப்பு, உரிமம் முடிவுறுதல் முதலியவற்றின் விளைவு.*

23. உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தாகர் ஒருவர் அல்லது உரிமம் பெற்ற பங்குதொகுதி வியாபாரி இறக்குமிடத்து, பதவிதுறக்குமிடத்து அல்லது உரிமம்பெற்ற பங்குதொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பான்மையிலிருந்து விலக்கப்படுமிடத்து அல்லது சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அத்தகைய பங்குத்தொகுதித் தாகராக அல்லது பங்குத்தொகுதி வியாபாரியாகத் தொழிலைக் கொண்டுநடாத்த இயலாதவராக வருகின்றவிடத்து அல்லது அத்தகைய பங்குத்தொகுதித் தாகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்படுகின்றவிடத்து, பேரவையானது அத்தகைய பங்குத்தொகுதித் தாகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி உறுப்பினராக விருந்த உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை அத்தகைய பங்குத்தொகுதித் தாகரின் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியின் வெளிநிலுவையாகவுள்ள ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்பதற்கு விடயத்துக்கேற்றுப்போல் வேறொரு உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தாகரொருவரை அல்லது உரிமம் பெற்ற பங்குத்தொகுதி வியாபாரியை ஒழுங்குசெய்யுமாறு அத்தகைய பங்குத்தொகுதித் தாகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி உறுப்பினராகவுள்ள உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைப் பணித்தல் வேண்டும்.

*உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் விதிகள்.*

24. (1) உரிமம்பெற்ற பங்குதொகுதிப் பரிவர்த்தனையின் விதிகளானவை, பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற அளவுக்குப் பேரவையின் முன் அங்கீகாரம் இவ்வாறு திருத்தப்படுதலோ வேறுபடுத்தப்படுதலோ இல்லாதொழிக்கப்படுதலோ ஆகாது.

(2) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் சபை அதன் விதிகளைத் திருத்த விரும்புகின்றவிடத்து, எழுத்திலான அறிவித்தல்மூலம் அத்தகைய பங்குதொகுதிப் பரிவர்த்தனையில் செய்ய விரும்புவனவான அத்தகைய விதிகளுக்கான இல்லாதொழித்தல் மூலமான, மாற்றுதல் மூலமான அல்லது அதனோடு எதனையும் சேர்ப்பதன் மூலமான திருத்தங்களைப் பேரவைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) பேரவை, உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை விசாரித்ததன் பின்னர் 2 ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலைப் பெற்றுக் கொண்டதிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள்ளாக அவ்விதிகளுக்கான அத்தகைய திருத்தங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா அல்லது அனுமதி மறுக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

அத்தகைய விதிகள் அனுமதி மறுக்கப்பட்டுள்ள விடயத்தில் பேரவையானது அவ்வாறு அனுமதி மறுப்பதற்கான காரணங்களைக் கொடுத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அத்தகைய அறிவித்தலுக்கு உடனடி பயன்கொடுத்தல் வேண்டும்.

**கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரங்களை மாற்றுதல்.**

25. விடயத்திற்கேற்றாற்போல, உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி ஏற்கனவே கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றவிடத்து அல்லது 15 ஆம் பிரிவின் கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றுக்கான பங்குத்தொகுதித் தரகருக்கான அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கான உரிமம் பெறுவதற்கான விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட நிலையில் இருந்து மாற்றமொன்று அடையப்பட்டவிடத்து அல்லது மாற்றமொன்று அடைய முன்னைப்பட்டவிடத்து பேரவைக்கு அறிவித்தல் கொடுத்து, அத்தகைய மாற்றுகை அல்லது மாற்றம் பயனுறுத்தப்படுவதன் முன்னர், அதன் முற் சம்மதத்தைப் பெறுவது முன்னைப்பட்டவிடத்து விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பங்குத்தொகுதி வியாபாரியின் அல்லது பங்குத்தொகுதித் தரகரின் கடமையாதல் வேண்டும்.

**பொய்யான அல்லது பிழையான வழியில் இட்டுச் செல்வதான கூற்றுக்களைச் செய்தல் தவறென்றாதல்.**

26. ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் செய்யப்படும் ஒரு விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு தொடர்பாக வேண்டுமென்று பொய்யான அல்லது பிழையான வழியில் இட்டுச்செல்லும் கூற்றொன்றைச் செய்தால் அல்லது விண்ணப்பமானது எக்கருமம் அல்லது விடயம் தவிர்க்கப்பட்டது காரணமாக முக்கிய விடயம் தொடர்பாகப் பிழையான வழியில் இட்டுச் செல்லக்கூடுமோ அக்கருமம் அல்லது விடயம் எதனையும் வேண்டுமென்று அறிக்கை செய்யாது விட்டால் அல்லது அறிக்கை செய்யத் தவறினால் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

**வாடிக்கையாளரின் சம்மதம் இன்றிப் பிணைப் பங்கில் கடன் கொடுத்தல் அல்லது கடன் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

27. உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி, எவரேனும் வாடிக்கையாளரின் கணக்கிற்குக் கொணரப்பட்ட பிணையங்கள் எவற்றையும் அவ்வாடிக்கையாளரின் எழுத்திலான சம்மதம் இன்றிக் கடன்கொடுத்தலோ, கடன் கொடுக்க ஒழுங்கு செய்தலோ அல்லது எவரேனும் வாடிக்கையாளரின் கணக்கிற்குக் கொணரப்பட்ட பிணையங்களைப் பயன்படுத்தி அவ்வாடிக்கையாளரின் எழுத்திலான ஒத்த சம்மதம்இன்றி கடன் எடுத்தலோ கடன் எடுக்க ஒழுங்கு செய்தலோ ஆகாது.

**பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்ட பங்குகளின் விற்பனைக்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை முறை.**

28. உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனியொன்றில் பங்குகள் வைத்திருக்கும் ஆள் எவரும் அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் மேற்கொள்ளப்படும் வியாபார நடவடிக்கை முறைக்கு இணங்கியொழுகுவதாகவல்லாது அத்தகைய பங்குகளை விற்பனை செய்தல் ஆகாது.

